Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.210/2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : மலையரசி | Father/Husband Name | : மலையாண்டி |
| Calling | : | Age | : |
| Date | : 23.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 23th day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**1–ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல்நிலையத்தில் கடந்த 2021–ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த தரண்யா மற்றும் காவல் ஆய்வாளர் மயில் அவர்களையும், அவரது கையொப்பமும் எனக்கு நன்றாக தெரியும். இவ்வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 29.04.2021ம் தேதி இரவு 8.00 மணிக்கு அன்றைய மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தரண்யா நிலைய

பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 ரேவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.18/21, பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அசாஆ.3 மற்றும் அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). வழக்கு கோப்பை அன்றைய காவல்நிலைய காவல் ஆய்வாளர் மயில் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். காவல் ஆய்வாளர் மயில் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.1 ரேவதி, நாகஜோதி, செல்வம், கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு மதுரை, முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 1 முதல் 3 எதிரிகள் முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை.

3) இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து பிரிவுகள் 498(A), 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-லிருந்து பிரிவுகள் 294(b), 506(1) உ/இ 4 of TNPHW Act-ஐ நீக்கம் செய்து பிரிவு 4 of DP Act -ன்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். (அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

4) இத்துடன் காவல் ஆய்வாளர் மயில் அவர்கள் தனது புலன்விசாரணை முடித்து 4-ம் எதிரி மூக்கம்மாளை தலைமறைவு எதிரியாக காட்டி மற்ற 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 4 of DP Act -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**1-ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்னதேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்ட தேதியில் தயார் செய்யப்பட்டவை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரை பெற்று உங்கள் மேல் அதிகாரி பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நீங்களும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.